குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, உளுந்தூர்பேட்டை.

**முன்னிலை : திருமதி.வே.கோமதி, பி.ஏ., பி.எல்.,**

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, உளுந்தூர்பேட்டை.

2026–ம் ஆண்டு மே திங்கள் 27 ஆம் நாள், புதன்கிழமை.

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 85/2025**

**CNR.NO.TNKA10 -001073-2025**

| | |
|---|---|
| குற்றமுறையிடுபவர் | அரசுக்காக காவல் உதவி ஆய்வாளர்,<br>உளுந்தூர்பேட்டை காவல் நிலைய<br>குற்ற எண் 368/2022 |
| குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் | எதிரிகள் பெயர்:<br>1. திரு.ஸ்ரீதர்ராஜ் (வயது 26 )<br>த/பெ. ராஜா<br>2. திரு. அருள்பிரகாஷ் (வயது 30)<br>த/பெ.முருகேசன் |
| குற்றப்பிரிவுகள் | 1 –வது எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 323, 506(ii).<br>2 –வது எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 323, 324, 506(ii). |
| வனையப்பட்டது | 1 –வது எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 323, 506(ii).<br>2 –வது எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 324, 506(ii). |
| தண்டிக்கப்பட்டது | இறுதியாக, 1 –வது எதிரி இதச பிரிவுகள் 294(b), 323, 506(ii)–ன் கீழும், 2 –வது எதிரி இதச பிரிவுகள் 294(b), 324, 506(ii)–ன் கீழும் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்தார்கள் என அரசு தரப்பு போதுமான சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி அரசுத்தரப்பில் நிரூபணம் செய்யாததால் சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி 1 –வது எதிரி இதச பிரிவுகள் 294(b), 323, 506(ii)–ன் கீழும், 2 –வது எதிரி இதச பிரிவுகள் 294(b), 324, 506(ii)–ன் கீழும் குற்றவாளிகள் இல்லையென முடிவு செய்து கு.வி.மு.ச பிரிவு 248(1)–ன் கீழ் எதிரிகளை விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. |
| தீர்மானம் | எதிரிகள் குற்றவாளிகள் இல்லை |

| குற்றம்சாட்டப்பட்டவர்கள் விபரம் | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| வ. எண் | பெயர் | த.பெ / க .பெ | மதம் | தொழில் | குடியிருப்பு | வயது |
| 1 | ஸ்ரீதர்ராஜ் | ராஜா | இந்து | டிரைவர் | புதுகாலனி, உளுந்தாண்டார் கோவில் காலனி, உளுந்தூர்பேட்டை | 26 |
| 2. | அருள்பிரகாஷ் | முருகேசன் | இந்து | டிரைவர் | புதுகாலனி, உளுந்தாண்டார் கோவில் காலனி, உளுந்தூர்பேட்டை | 30 |

தேதி விவரங்கள்:–

| | | |
|---|---|---|
| நிகழ்வு நாள் | : | 23.08.2022 |
| புகார் | : | 24.08.2020 |
| கைது தேதி | : | – |
| பிணை விடுவிப்பு | : | A1 – Released on own Bond. Surities produced on 26.08.2022<br><br>A2 – u/sec 88 Crpc surrendered before this corut MP.No. 3/2026 on 27.05.2026 |
| Committal | : | N.A |
| விசாரணை துவக்கம் | : | 03.03.2026 |
| வழக்கு விசாரணை முடிவு | : | 27.05.2026 |
| எதிரிகள் காவலில் இருந்த நாட்கள் | : | – |
| இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட தேதி | : | 24.03.2025 |
| Date of Questioning | : | 12.03.2026 |
| இடையீட்டு மனுக்கள் மற்றும் அதன் முடிவு | : | Compromise Petition MP.No 1/2026 is dismissed on 13.05.2026<br>311 Cr.P.C Petition MP.No. 2 /2026 is allowed on 25.05.2026 |

| | | |
|---|---|---|
| சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்த தேதிகள் | : | PWs Chief Cross<br>1.13.05.2026 13.05.2026<br>2.13.05.2026 13.05.2026<br>3. 22.05.2026 22.05.2026<br>4.22.05.2026 22.05.2026<br>5.25.05.2026 25.05.2026 |
| சட்டப்பிரிவு 313(1)(b) கு.வி.மு.ச – விசாரணை தேதி | : | 26.05.2026 |
| தலைமறைவு எதிரிகளின் விபரம் அவர்கள் கைது செய்த விவரம் ஆஜர்படுத்தப்பட்ட விபரம் | : | Nil |
| மேலவை நீதிமன்றங்களால் தடையாணை வழங்கப்பட்ட விவரம் அதன் முடிவு | : | Nil |
| காலதாமதத்திற்கான காரணம் | : | Nil |

இவ்வழக்கானது 24.03.2025–ம் தேதியில் கோப்புக்கு எடுக்கப்பட்டு என் முன்பாக இறுதியாக 27.05.2026 –ம் தேதி விசாரணைக்கு வரப்பெற்று, அரசு தரப்பில் உதவி வழக்குரைஞர் அவர்களும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.தங்க ரமேஷ்., BA., BL., அவர்களும் ஆஜராகி செய்த வாதுரைகளை கேட்டும், சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்து இதுநாள் வரையில் என் சீரிய பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும் ...

## தீர்ப்புரை

இவ்வழக்கானது புகார்தாரரால் குற்றவியல் விசாரணை முறைச்சட்டப்பிரிவு 173(2)–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட இறுதி அறிக்கையின்படி எழுந்த வழக்காகும்.

**2. குற்ற முறையீட்டின் சுருக்கம்:–**

இவ்வழக்கின் வாதியான சாட்சி 1 மணிகண்டன் என்பவர் உளுந்தூர்பேட்டை சேலம் ரோட்டில் உள்ள உழவர் சந்தை அருகில் கட்டிடத்தை அன்னை மெஸ் மற்றும் ஐயங்கார் பேக்கரி என்ற இரு கடைகளுக்கு வாடகைக்கு விட்டுள்ளார். இந்நிலையில் 23.08.2022 தேதி இரவு 7.30மணிக்கு சாட்சி 1 ஐயங்கார் பேக்கரி கடைக்கு முன்பு நின்று கொண்டிருந்தபோது அங்கிருந்த எதிரி 1 ஸ்ரீதர்ராஜா த/பெ ராஜா, எதிரி 2 அருள்பிரகாஷ் த/பெ முருகேசன் ஆகிய இருவரும் பேக்கரியில் உள்ளவர்களை பார்த்து ஏ தேவிடியா பசங்களா வெளியே வாங்கடா எங்களுக்கு மாமுள் கொடுக்காம நீங்க எப்புடிடா கடை நடத்தலாம் என்று அசிங்கமாக திட்டியதை

பார்த்த சாட்சி 1 ஏன் இப்படி போறிங்க கடை என்னுடைய வாடகை கட்டிடம் உங்களுக்கு ஏன் மாமுல் தர வேண்டும் என்று கேட்டதற்கு எதிரி 1 சாட்சி பார்த்து ஏய் தேவிடியா பையா அப்படி தாண்டா கேப்போம் என்று அசிங்கமாக திட்டி சாட்சி 1 ன் கண்ணத்தில் அறைந்தும் எதிரி 2 இந்த புண்டக்கிட்ட என்னடா பேச்சு என்று அசிங்கமாக திட்டி அவர் கையில் வைத்திருந்த தடியால் சாட்சி 1ன் முதுகில் அடித்து சொற்பகாயத்தினை ஏற்படுத்தியும் மேலும் எதிரிகள் இருவரும் அங்கிருந்து போகும்போது அவர்கள் கையில் வைத்திருந்த தடியை காட்டி இனி எங்க பிரச்சனையில் தலையிட்டா உன்னை அடித்தே கொன்று விடுவோம் என்று கொலை மிரட்டல் விடுத்து சென்ற குற்ற செயலினை புரிந்துள்ளார்கள். எனவே 1–வது எதிரியின் செய்கையானது இதச பிரிவுகள் 294(b), 323, 506(II) –ன் படியும் 2–வது எதிரியின் செய்கையானது இதச பிரிவுகள் 294(b), 323, 324, 506(II) –ன் படியும் தண்டிதக்க குற்றம் புரிந்துள்ளார்கள் என உளுந்தூர்பேட்டை காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

3. குற்றப்பத்திரிக்கை கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. எதிரிகள் முன்னிலையானவுடன் அவர்களுக்கு வழக்காவணங்களின் நகல் கு.வி.மு.ச பிரிவு 207–ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டு, போதிய கால அவகாசத்திற்கு பின்பு, வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து, எதிரிகளுக்கு எதிராக கு.வி.மு.ச பிரிவு 240(1) –ன் படி 1 –வது எதிரி இதச பிரிவுகள் 294(b), 323, 506(ii)–ன் கீழும், 2 –வது எதிரி இதச பிரிவுகள் 294(b), 324, 506(ii)–ன் கீழும் குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்டு, கு.வி.மு.ச 240(2) பிரிவின் கீழ் அவர்களிடம் விளக்கி வினவிய போது எதிரிகள் பொய்வழக்கு என மறுத்து கூறியதால் அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

**<u>4. விசாரணை:–</u>**

அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர்.அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டன. எதிரிகள் தரப்பில் சாட்சிய சான்றாவணங்கள் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

**<u>5. அரசு தரப்பு சாட்சியத்தின் சுருக்கம் :-</u>**

(1) அ.சா.1 திரு.மணிகண்டன் தனது சாட்சியத்தில், "நான் உளுந்தூர்பேட்டையில் வசித்து சுயதொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியாது. சுமார் 4 வருடங்களுக்கு முன்பாக யார் என்னை திட்டி, அடித்தார்கள் என்று எனக்கு நினைவு இல்லை. சம்பவத்தின் போது எனக்கு காயம் ஏற்பட்டதால் நான் மருத்துவமனைக்கு சென்றேன். ஏற்கனவே

எதிரிகளுக்கும் எங்களுக்கும் முன்விரோதம் இருந்ததால் அவர்கள் தான் அடித்திருக்க கூடும் என்ற அனுமாணத்தின்பேரில் புகார் அளித்தேன். புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகாரில் உள்ளகையொப்பம் அ.சா.ஆ–1 ஆகும். அதில் என்ன வாசகம் உள்ளது என்று தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை" என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

(2) அ.சா.2 திரு.ஸ்ரீநாத் தனது சாட்சியத்தில், "நான் உளுந்தூர்பேட்டையில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 யை தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியாது. சம்பவம் பற்றி எனக்கு எதுவும் நேரிட்டு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை" என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

(3) அ.சா.3 திருமதி.ராஜி தனது சாட்சியத்தில், "நான் உளுந்தூர்பேட்டையில் வசித்து ஆட்டோ ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1–யை தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். அ.சா.1–க்கும் ஆஜர் எதிரிகளுக்கும் என்ன தகராறு என்று நேரிட்டு எனக்கு தெரியாது.போலிசார் என்னை விசாரிக்கவில்லை" என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

(4) அ.சா.4 திரு.கார்த்திக் தனது சாட்சியத்தில், "நான் உளுந்தூர்பேட்டையில் வசித்து ஹோட்டல் மாஸ்டராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1–யை தெரியும்.என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். என்னுடன் ராஜி என்பவர் கையொப்பம் செய்தார். சுமார் 1–1/2 வருடங்களுக்கு முன்பாக நான் காவல்நிலையத்திற்கு சென்ற போது போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க கையொப்பம் செய்தேன். பார்வை மகசரில் உள்ள கையொப்பம் அ.சா.ஆ.2ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள். போலிசார் விசாரித்த போது சண்டையை பற்றி தெரியாது என்று தான் சொன்னேன்" என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(5) அ.சா.5 திரு.முத்துகுமரன் காவல் சிறப்பு உதவிஆய்வாளர் திரு.குணசேகரன் தனது சாட்சியத்தில், " நான் தற்போது உளுந்தூர்பேட்டை காவல் நிலையத்தில் காவல் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். அதே காவல் நிலையத்தில் பணிபுரிந்த காவல் உதவி ஆய்வாளர் திரு.அருள்செல்வம் என்பவருடன் நான் பணிபுரிந்த வகையில் அவரது கையெழுத்தும் கையொப்பம் எனக்கு தெரியும் என்பதால் ஆவணங்கள் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன். உதவி ஆய்வாளர் திரு.அருள்செல்வம் அவர்கள் நிலைய பொறுப்பில் இருந்தபோது 24.08.2022 தேதி 6.00 மணிக்கு முருகன் மகன் மணிகண்டன் என்பவர் கொடுத்த புகாரை பெற்றார். அந்த புகார் அ.சா.ஆ.3 ஆகும். மேற்படி புகாரின் அடிப்படையில்

நிலைய குற்ற எண். 368/2022 இ.த.ச.பிரிவுகள் 294(பி), 323, 324, 506(2) ன் படி முதல் தகவல்அறிக்கை தயார் செய்தார். அவர் தயார் செய்த முதல் தகவல்அறிக்கை அ.சா.ஆ.4 ஆகும். பின்னர் அவர் சம்பவம் இடம் சென்று கார்த்திக், முருகன் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்தார். அவர் தயார் செய்த பார்வை மகசர் அ.சா.ஆ.5 ஆகும். மாதிரிவரைபடம் அ.சா.ஆ.6 ஆகும். பின்னர் எதிரிகள் குற்றம் புரிந்துள்ளார்கள் என்பதை கண்டு எதிரிகளை தேடி சென்றதில் எதிரி ஸ்ரீதர்ராஜ் உளுந்தூர்பேட்டை கனரா பேங்க் அருகே நின்றிருந்த அவரை 24.08.2022 ம் தேதி 9.30 காரணம் கூறி கைது செய்து திரேக பரிசோதனை செய்து வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தார். பின்னர் சம்பவ சாட்சிகளான மணிகண்டன், ராஜு, ஸ்ரீநாத், கார்த்திக், நவீன் ஆகியோர்களை தனித்தனியே விசாரணை செய்தும், பார்வை மகசர் சாட்சிகளை தனித்தனியே விசாரணை செய்தும் வாக்குமூலம் பதிவு செய்தார். பின்னர் காயம்பட்ட சாட்சியான அ.சா.1 க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் சுபா அவரை சந்தித்து விசாரித்து, காயச்சான்று பெற்றார். மருத்துவர் அளித்த காயச்சான்று அ.சா.ஆ.7 ஆகும். பின்னர் எதிரிகள் குற்றம் புரிந்துள்ளார்கள் எனகண்டு 294(பி), 323, 324, 506(2) இ.த.ச.ன்படி எதிரியின் மீது புலன்விசாரணை மேற்கொண்டு இறுதிஅறிக்கை தாக்கல் செய்தார்" என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**6. கு.வி.மு.ச பிரிவு 313–ன் படியான நடவடிக்கை:–**

அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிகளுக்கு பாதகமாகத் தோன்றிய சந்தர்ப்பங்கள் குறித்து கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)–ன் படி கேள்விகள் கேட்க, எதிரிகள் அதை பொய்சாட்சி என மறுத்துக் கூறினார்கள். எதிரிகள் தரப்பில் சாட்சியம் எதுவும் முன்வைக்கப்படவில்லை. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது.

**6(a) அரசு தரப்பில் வாதம் :**

அரசு தரப்பில் 1 –வது எதிரி மீதான இதச பிரிவுகள் 294(b), 323, 506(ii)–ன் கீழான குற்றச்சாட்டுகளும், 2 –வது எதிரி மீதான இதச பிரிவுகள் 294(b), 324, 506(ii)–ன் கீழான குற்றச்சாட்டுகளும் போதுமான சாட்சிய சான்றாவணங்கள் மூலம் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதால் எதிரிகள் குற்றவாளிகள் எனவே, தண்டிக்கப்பட வேண்டும் என வாதம் செய்யப்பட்டது.

**6(b) எதிரி தரப்பில் வாதம்:**

எதிரிகள் தரப்பில் சமாதான மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், சாட்சிகளில் எவரும் எதிரிகள் மீதான குற்ற செயல்களை நிரூபிக்கும் வகையிலும் சாட்சியம் அளிக்கவில்லை. எனவே சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி விடுதலை செய்ய வேண்டும் என வாதம் செய்யப்பட்டது.

**7. தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை:–**

இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டியது 1 –வது எதிரி மீதான இதச பிரிவுகள் 294(b), 323, 506(ii)–ன் கீழான குற்றச்சாட்டுகளும், 2 –வது எதிரி மீதான இதச பிரிவுகள் 294(b), 324, 506(ii)–ன் கீழான குற்றச்சாட்டுகளும், அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

**8. தீர்வு :-**

(8.1) இவ்வழக்கின் வாதியான சாட்சி 1 மணிகண்டன் என்பவர் உளுந்தூர்பேட்டை சேலம் ரோட்டில் உள்ள உழவர் சந்தை அருகில் கட்டிடத்தை அன்னை மெஸ் மற்றும் ஐயங்கார் பேக்கரி என்ற இரு கடைகளுக்கு வாடகைக்கு விட்டுள்ளார். இந்நிலையில் 23.08.2022 தேதி இரவு 7.30 மணிக்கு சாட்சி 1 ஐயங்கார் பேக்கரி கடைக்கு முன்பு நின்று கொண்டிருந்தபோது அங்கிருந்த எதிரி 1 ஸ்ரீதர்ராஜா த/பெ ராஜா, எதிரி 2 அருள்பிரகாஷ் த/பெ முருகேசன் ஆகிய இருவரும் பேக்கரியில் உள்ளவர்களை பார்த்து ஏ தேவிடியா பசங்களா வெளியே வாங்கடா எங்களுக்கு மாமுள் கொடுக்காம நீங்க எப்புடிடா கடை நடத்தலாம் என்று அசிங்கமாக திட்டியதை பார்த்த சாட்சி 1 ஏன் இப்படி போறிங்க கடை என்னுடைய வாடகை கட்டிடம் உங்களுக்கு ஏன் மாமுல் தர வேண்டும் என்று கேட்டதற்கு எதிரி 1 சாட்சி பார்த்து ஏய் தேவிடியா பையா அப்படி தாண்டா கேப்போம் என்று அசிங்கமாக திட்டி சாட்சி 1 ன் கண்ணத்தில் அறைந்தும் எதிரி 2 இந்த புண்டக்கிட்ட என்னடா பேச்சு என்று அசிங்கமாக திட்டி அவர் கையில் வைத்திருந்த தடியால் சாட்சி 1ன் முதுகில் அடித்து சொற்பகாயத்தினை ஏற்படுத்தியும் மேலும் எதிரிகள் இருவரும் அங்கிருந்து போகும்போது அவர்கள் கையில் வைத்திருந்த தடியை காட்டி இனி எங்க பிரச்சனையில் தலையிட்டா உன்னை அடித்தே கொன்று விடுவோம் என்று கொலை மிரட்டல் விடுத்து சென்ற குற்ற செயலினை புரிந்துள்ளார்கள். எனவே 1–வது எதிரியின் செய்கையானது இதச பிரிவுகள் 294(b), 323, 506(II) IPC –ன் படியும் 2–வது எதிரியின் செய்கையானது 294(b), 323, 324, 506 (II) IPC–ன் படியும் தண்டிதக்க குற்றம் என்பதே அரசு தரப்பு வழக்காகும்.

(8.2) அ.சா.1 திரு.மணிகண்டன் கொடுத்த அ.சா.ஆ.3 புகாரிலும், போலிசார் வாக்குமூலத்திலும், " 23.08.2022 ந் தேதி இரவு 7.30 மணிக்கு நான் ஐயங்கார் பேக்கரி கடைக்கு முன்பு நின்று கொண்டிருந்தபோது அந்த கடைக்கு முன்பாக உளுந்தாண்டார் கோவில் காலனியை சேர்ந்த ஸ்ரீதர்ராஜ் த/பெ ராஜா, அருள்பிரகாஷ் த/பெ முருகேசன் மற்றும் இருவர் நின்று கொண்டு பேக்கரியில்

உள்ளவர்களை பார்த்து ஏய் தேவிடியா பசங்களா வெளியே வாங்கடா எங்களுக்கு மாமுல் கொடுக்காம நீங்க எப்புடிடா கடை நடத்தலாம் என்று அசிங்கமாக திட்டினார்கள். இதை பார்த்த நான் ஏன் இப்படி பேசுறிங்க கடை என்னுடைய வாடகை கட்டிடம் உங்களுக்கு ஏன் மாமுல் தர வேண்டும் என்று கேட்டதற்கு மேற்படி ஸ்ரீதர்ராஜ் என்பவர் ஏய் தேவிடியா பையா அப்படி தாண்டா கேப்போம் என்று அசிங்கமாக திட்டி என் கன்னத்தில் அறைந்தார் அருள்பிரகாஷ் என்பவர் இந்த புண்டக்கிட்ட என்னடா பேச்சு என்று சொல்லி தடியால் என் முதுகில் அடித்தார் உடனே நான்கு பேரும் என்னை தடியால் சரமாறியாக அடித்தார்கள் வலியால் நான் சத்தம் போடவே அக்கம் பக்கத்தினர் ஓடி வந்து சண்டையை மறித்து விட்டார்கள் அவர்கள் நான்கு பேரும் போகும் போது அவர்கள் கையில் வைத்திருந்த தடியை காட்டி இனி எங்க பிரச்சனையில் தலையிட்டா உன்னை அடித்தே கொன்று விடுவோம் என்று கொலை மிரட்டல் விடுத்தார்கள் " என்று கூறப்பட்டுள்ளது.

ஆனால் அ.சா.1 அரசு தரப்பு முதல் விசாரணையில், "ஆஜர் எதிரிகளை தெரியாது. சுமார் 4 வருடங்களுக்கு முன்பாக யார் என்னை திட்டி, அடித்தார்கள் என்று எனக்கு நினைவு இல்லை. சம்பவத்தின் போது எனக்கு காயம் ஏற்பட்டதால் நான் மருத்துவமனைக்கு சென்றேன். ஏற்கனவே எதிரிகளுக்கும் எங்களுக்கும் முன்விரோதம் இருந்ததால் அவர்கள் தான் அடித்திருக்க கூடும் என்ற அனுமாணத்தின்பேரில் புகார் அளித்தேன். புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அதில் என்ன வாசகம் உள்ளது என்று தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை" என்று அ.சா.ஆ.3 புகார் மற்றும் போலிசார் அவிசாரணை வாக்குமூலத்திற்கு முரண்பட்டு பிறழ்சாட்சியமளித்துள்ளார்.

(8.3) கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 திரு.ஸ்ரீநாத் போலிசார் வாக்குமூலத்தில், "23.08.2022 ம் தேதி இரவு 7.30 மணிக்கு நானும் எனது நண்பர்களான உளுந்தூர்பேட்டையை சேர்ந்த கண்ணன் மகன் ராஜி, கருணாநிதி மகன் கார்த்திக் மற்றும் வெங்கடேசன் மகன் நவீன் ஆகிய நான்கு பேரும் உளுந்தூர்பேட்டை சேலம் ரோடு உழவர் சந்தை அருகில் உள்ள ஐயங்கார் பேக்கரி கடை அருகில் நின்று பேசிக்கொண்டிருந்தபோது அந்த கடைக்கு முன்பாக உளுந்தாண்டார் கோவில் காலனியை சேர்ந்த ஸ்ரீதர்ராஜ் த/பெ ராஜா, அருள்பிரகாஷ் த/பெ முருகேசன் மற்றும் இருவர் நின்று கொண்டு பேக்கரியில் உள்ளவர்களை பார்த்து ஏய் தேவிடியா பசங்களா வெளியே வாங்கடா எங்களுக்கு மாமுல் கொடுக்காம நீங்க எப்புடிடா கடை நடத்தலாம் என்று அசிங்கமாக திட்டினார்கள். இதை அங்கு நின்று இருந்த பாரிவள்ளல் தெருவை சேர்ந்த முருகன் மகன் மணிகண்டன் என்பவர் ஏன் இப்படி பேசுறிங்க கடை

என்னுடைய வாடகை கட்டிடம் உங்களுக்கு ஏன் மாமுல் தர வேண்டும் என்று கேட்டதற்கு மேற்படி ஸ்ரீதர்ராஜ் என்பவர் ஏய் தேவிடியா பையா அப்படி தாண்டா கேப்போம் என்று அசிங்கமாக திட்டி மணிகண்டன் கன்னத்தில் அறைந்தார் அருள்பிரகாஷ் என்பவர் இந்த புண்டக்கிட்ட என்னடா பேச்சு என்று சொல்லி தடியால் அவர் முதுகில் அடித்தார் உடனே நான்கு பேரும் மணிகண்டனை தடியால் சரமாறியாக அடித்தார்கள் வலியால் மணிகண்டன் சத்தம் போடவே நாங்க நாலு பேரும் மற்றும் அக்கம் பக்கத்தினரும் ஓடி வந்து சண்டையை மறித்து விட்டோம் அவர்கள் நான்கு பேரும் போகும் போது அவர்கள் கையில் வைத்திருந்த தடியை காட்டி மணிகண்டனை பார்த்து இனி எங்க பிரச்சனையில் தலையிட்டா உன்னை அடித்தே கொன்று விடுவோம் என்று மிரட்டிவிட்டு சென்றார்கள்" என்று கூறப்பட்டுள்ளது.

ஆனால் அ.சா.2 அரசு தரப்பு முதல் விசாரணையில், "அ.சா.1 யை தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியாது. சம்பவம் பற்றி எனக்கு எதுவும் நேரிட்டு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை" என்று பிறழ்சாட்சியமளித்து எதிரிகள் மீதான குற்றச்செயல்களை உறுதிப்படுத்தி சாட்சியமளிக்கவில்லை.

(8.4) கண்ணுற்ற சாட்சியான அ.சா.3 திருமதி.ராஜி அரசு தரப்பு முதல் விசாரணையில், "அ.சா.1–யை தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். அ.சா.1–க்கும் ஆஜர் எதிரிகளுக்கும் என்ன தகராறு என்று நேரிட்டு எனக்கு தெரியாது.போலிசார் என்னை விசாரிக்கவில்லை " என்று பிறழ்சாட்சியமளித்து அரசு தரப்பு வழக்கை அனுசரித்து உறுதிப்படுத்தி சாட்சியமளிக்கவில்லை.

(8.5) அ.சா.4 பார்வை மகசர் சாட்சியான திரு.கார்த்திக் அரசு தரப்பு முதல் விசாரணையில், "அ.சா.1–யை தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். என்னுடன் ராஜி என்பவர் கையொப்பம் செய்தார். சுமார் 1–1/2 வருடங்களுக்கு முன்பாக நான் காவல்நிலையத்திற்கு சென்ற போது போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க கையொப்பம் செய்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.போலிசார் விசாரித்த போது சண்டையை பற்றி தெரியாது என்று தான் சொன்னேன்" என்று சாட்சியமளித்து அ.சா.ஆ.5 பார்வை மகசர் சங்கதிகளை உறுதிப்படுத்தி சாட்சியமளிக்கவில்லை.

(8.6) அ.சா.5 காவல் சிறப்புஉதவி ஆய்வாளர் திரு. முத்துகுமரன் ஆவணக்கோப்புகளின் அடிப்படையில் சாட்சியமளித்துள்ளார். எதிரிகள் தரப்பில் சமாதான மனு தாக்கல் செய்து M.P.No. 1/2026, 13.05.2026 தேதியில் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

(8.7) அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்து அ.சா.1 அ.சா.ஆ.3 புகாரின் சங்கதிகளை உறுதிப்படுத்தி சாட்சியமளிக்காததும், கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.2, அ.சா.3 வழக்கு சம்பவத்தையும், எதிரிகளுக்கு எதிரான குற்றச்செயலையும் உறுதிப்படுத்தி சாட்சியமளிக்காததும், அ.சா. 4 பார்வை மகசர் சாட்சி, பார்வை மகசர் சங்கதிகளை உறுதிப்படுத்தி சாட்சியமளிக்காததும், அ.சா.5 ஆவணக் கோப்புகளின் அடிப்படையில் சாட்சியமளித்துள்ளதும், 23.08.2022 –ந் தேதி எதிரிகள் இருவரும் அ.சா.1–ஐ பார்த்து அசிங்கமாக திட்டியும், 1–வது எதிரி அ.சா.1–ஐ கண்ணத்தில் அறைந்தும், 2–வது எதிரி தடியால் அ.சா.1–ன் முதுகில் அடித்தும், எதிரிகள் இருவரும் கொலைமிரட்டல் விடுத்தார்கள் என்ற அரசு தரப்பிலான குற்றச்சாட்டு அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் உறுதிப்படுத்தப்படவில்லை. ஆக, 1 –வது எதிரி மீதான இதச பிரிவுகள் 294(b), 323, 506(ii)–ன் கீழான குற்றச்சாட்டுகளும், 2 –வது எதிரி மீதான இதச பிரிவுகள் 294(b), 324, 506(ii)–ன் கீழான குற்றச்சாட்டுகளும் அரசுத்தரப்பில் போதுமான சாட்சிய, சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபனம் செய்யப்படவில்லை. எனவே 1 –வது எதிரி இதச பிரிவுகள் 294(b), 323, 506(ii)–ன் கீழும், 2 –வது எதிரி இதச பிரிவுகள் 294(b), 324, 506(ii)–ன் கீழும் குற்றவாளிகள் இல்லை என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**இறுதியாக, 1 –வது எதிரி இதச பிரிவுகள் 294(b), 323, 506(ii)–ன் கீழும், 2 –வது எதிரி இதச பிரிவுகள் 294(b), 324, 506(ii)–ன் கீழும் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்தார்கள் என அரசு தரப்பு போதுமான சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி அரசுத்தரப்பில் நிரூபணம் செய்யாததால் சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி 1 –வது எதிரி இதச பிரிவுகள் 294(b), 323, 506(ii)–ன் கீழும், 2 –வது எதிரி இதச பிரிவுகள் 294(b), 324, 506(ii)–ன் கீழும் குற்றவாளிகள் இல்லையென முடிவு செய்து கு.வி.மு.ச பிரிவு 248(1)–ன் கீழ் எதிரிகளை விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.**

எதிரிகள் எழுதிக் கொடுத்துள்ள பிணையப்பத்திரமும் மேல்முறையீட்டு காலத்திற்கு பின் ரத்தாகிவிடும் என்று இந்நீதிமன்றம் உத்தரவிடப்படுகிறது. வழக்கு சொத்து குறித்த உத்தரவு இல்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் திருத்தம் செய்யப்பட்டு, 2026–ஆம்

ஆண்டு மே திங்கள் 27 –ஆம் நாளாகிய இன்று என்னால் அவையறிய பகரப்பட்டது.

V GOMATHI Digitally signed by V GOMATHI Date: 2026.05.27 12:36:38 +0600

நீதித்துறை நடுவர் எண்.1,
உளுந்தூர்பேட்டை.

| | | |
|---|---|---|
| **இணைப்பு :** | | |
| **அரசு தரப்பு சாட்சிகள்**:– | | |
| அ.சா.1 | திரு.மணிகண்டன் த/பெ முருகன் | |
| அ.சா. 2 | திரு. ஸ்ரீநாத் த/பெ பாலு | |
| அ.சா.3 | திரு. ராஜி த/பெ கண்ணன் | |
| அ.சா.4 | திரு.கார்த்திக் த/பெ ஏழுமலை | |
| அ.சா.5 | திரு. முத்துகுமரன் த/பெ சந்திரன் (சிறப்பு காவல் உதவிஆய்வாளர்) | |
| **அரசு தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள்**:– | | |
| அ.சா.ஆ. 1 | 24.08.2022 | புகாரில் உள்ள அ.சா. 1 ன் கையொப்பம் |
| அ.சா.ஆ. 2 | 24.08.2022 | பார்வை மகசரில் உள்ள அ.சா.4–ன் கையொப்பம் |
| அ.சா.ஆ. 3 | 24.08.2022 | புகார் |
| அ.சா.ஆ. 4 | 24.08.2022 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ. 5 | 24.08.2022 | பார்வை மகசர் |
| அ.சா.ஆ. 6 | 24.08.2022 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ. 7 | 23.08.2022 | அ.சா.1– ன் காயச்சான்று |

**அரசு தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சான்று பொருள்**: இல்லை
**எதிரிகள் தரப்பில் சாட்சிகள்** : இல்லை
**எதிரிகள் தரப்பில் சான்றாவணம்** : இல்லை

V GOMATHI Digitally signed by V GOMATHI Date: 2026.05.27 12:38:05 +0600

நீதித்துறை நடுவர் எண்.1,
உளுந்தூர்பேட்டை.

**நகல்கள்**

1. மேதகு தலைமை நீதித்துறை நடுவர் அவர்கள், கள்ளக்குறிச்சி பணிந்து

சமர்ப்பிக்கப்படுகிறது.

2. அரசு கூடுதல் குற்றத்துறை வழக்கறிஞர், உளுந்தூர்பேட்டை

3. காவல் உதவி ஆய்வாளர், உளுந்தூர்பேட்டை காவல் நிலையம்.

**<u>குறிப்பு</u>**

அரசு தரப்பு சாட்சிகள் யாரும் ஒரு நாளைக்கு மேல் நிற்க வைக்கப்படவில்லை.